**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 138/2012** **Date:24.11.2025**

**(DW2)- செல்வராஜமணி**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் செருப்பங்கோட்டில் கதவு எண் 6/60 A என்ற விலாசத்தில் வசித்துவருகிறேன். மேற்படி வீடு யாரது பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது. கட்டுமாங்கோடு பஞ்சாயத்தில் செருப்பங்கோடு என்ற பெயரில் ஒரு ஊர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கட்டுமாங்கோடு பஞ்சாயத்தில் மட்டும் தான் செருப்பங்கோடு என்ற ஊர் உள்ளது என்றால் சரியல்ல, நெட்டாங்கோடு பஞ்சாயத்திலும் செருப்பங்கோடு என்ற ஊர் உள்ளது.

2. நான் தற்போது செருப்பங்கோடு என்ற ஊரில் குடியிருக்கவில்லையென்றாலும் பாலப்பள்ளம் என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. சானல் இரண்டாக பிரிந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் முன்னோர்கள் சொல்லி தெரியும். நான் குறிப்பிடும் சுடலை மாட சுவாமி கோவில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கோவிலின் வருடாந்திர கணக்குகளை மாவட்ட பதிவாளரிடம் ஒப்படைப்போம் என்றால் சரியல்ல, பதிவு செய்ய மாட்டோம். மாவட்ட பதிவாளரிடம் வேறு எதை பதிவு செய்வோம் என்றால் மாவட்ட பதிவாளரிடம் செல்ல மாட்டோம்.

3. மேற்படி கோவிலின் பதிவெண் என்ன என்றால் தற்போது நினைவில்லை. நங்கன் விளை எவ்வளவு பரப்பளவு என்றால் சுமார் 1 கிலோ மீட்டர் அளவில் இருக்கும். நான் இந்த வழக்கில் தேவையான தரப்பினர்களை சேர்க்கவில்லையென்று குறிப்பிட்டுள்ளேன், யார் தேவையான தரப்பினர் என்றால் செருப்பங்கோடு சார்ந்த Sreenivasan, ராஜசேகர் என்பவர் அவசிய தரப்பினராவார். நங்கன்விளை ஊரிலுள்ள பிரதிநிதிகள் யார் என்றால் அது பற்றி தெரியாது. எனக்கு எந்த ஊரில் வாக்காளர் அடையாள அட்டை உள்ளது என்றால கட்டுமாங்கோடு ஊரில் உள்ளது.

4. நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் எனக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது என்றால் சரிதான். நான் குறிப்பிடுவது போல் நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் எனக்கு வீடும் , வாக்கும் கிடையாது என்றாலும் சரியல்ல. எனக்கு சம்பந்தப்பட்ட எந்த

ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றாலும் பிற நபர்களின் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் ஊரின் அமைதியை குலைப்பதற்கு வேண்டியும் ஊரில் சட்ட ஒழுங்கு பிரச்சனையை ஏற்படுத்த வேண்டியும் தான் இந்த வழக்கில் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

5. நான் குறிப்பிடுவது போல் சானலின் மேற்கு பக்கம் செருப்பங்கோடு என்ற ஊரே கிடையாது என்றாலும் அதை காட்டக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. நான் கட்டுமாங்கோடு பஞ்சாயத்தில் வசித்து வந்து நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் தற்போது வசிப்பதாக பொய்யளான சங்கதிசகளை கூறி இந்த வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நெட்டாங்கோட்டில் தான் எனது குடும்ப உறுப்பினர்கள் வசித்து வருகிறார்கள், அது எனது பூர்வீகமாகும்.

6. கட்டிமாங்கோடு ஊரிலிருந்து நெட்டாங்கோட்டிற்கு குடிபெயர்ந்து வந்த நபர்கள் தான் இவ்வாறு ஊரின் பெயரை மாற்றி தாவா செய்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள புதிய சர்வே எண்ணிற்காக பழைய சர்வே எண் என்ன என்றால் தற்போது நினைவில்லை. அதற்கான ஒப்புமை பதிவேடுகளை பார்த்துள்ளேனா என்றால் நினைவில்லை. பழைய புல எண்ணிற்கான புல வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வழக்கு உண்மையென்பதால் நெட்டாங்கோடு ஊரில் உள்ள நபர்களே இந்த வழக்கை நடத்த முன்வரவில்லை என்றாலும் இந்த ஊருக்கு சற்றும் சம்பந்தமில்லாத நான் குழப்பத்தை உண்டு பண்ண வேண்டி வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அரசு ஆவணங்களில்லையென்பதால் அதை ஏற்று கொள்ள முடியாது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்க தக்கது என்றால் சரியல்ல.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்